சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை–8
ந.க. எண்.5729/அ4/2022, நாள்.12.08.2022

பொருள்: பள்ளிக் கல்வி – மாநில நல்லாசிரியர் விருது வழங்குதல் – 2021–2022 ஆம் ஆண்டில் சிறப்பாக பணிபுரிந்த ஆசிரியர்களுக்கு டாக்டர். இராதாகிருஷ்ணன் விருது 05.09.2022 அன்று வழங்கிட ஏதுவாக ஆசிரியர்களை தேர்வு செய்து, அவர்கள் சார்பான கருத்துருக்களை அனுப்பிவைக்க கோருதல் – சார்பு.

பார்வை: 1 அரசாணை (1டி) எண்.220, பள்ளிக் கல்வி (பொதுII) த்துறை, நாள்.05.08.2022.
2 சென்னை–06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், ந.க.எண்.46500/ஐ/இ1/2022, நாள்.05.08.2022 .

––––

பார்வை 2–ல் காணும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகளின்படி, மேற்காண் பொருள் சார்ந்து, சென்னை வருவாய் மாவட்டம் சார்பாக 2021–2022 ஆம் ஆண்டிற்கான ''டாக்டர் இராதாகிருஷ்ணன்'' மாநில நல்லாசிரியர் விருதுக்கு தகுதி வாய்ந்தோரின் கருத்துருக்களை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

எனவே பார்வை 1–ல் காண் அரசாணையில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றியும் பார்வை 2–ல் காண் பள்ளிக் கல்வி ஆணையரின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள நெறிமுறைகளை பின்பற்றியும் ''டாக்டர் இராதாகிருஷ்ணன்'' மாநில நல்லாசிரியர் விருதுக்கு தகுதி வாய்ந்த ஆசிரியர்களின் கருத்துருக்களை 16.08.2022 –க்குள் சார்ந்த ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்டு, அதனை தொகுத்து இரண்டு பிரதிகளுடன் இவ்வலுவலகத்தில் 17.08.2022–க்குள் பிரிவு எழுத்தரிடம் மாலை 5.00 மணிக்குள் நேரிடையாக ஒப்படைக்குமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **இது மிகவும் அவசரம்.**

இணைப்பு :
பார்வையில் காண் அரசாணை, படிவம் மற்றும்
பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், படிவம்.

முதன்மைக் கல்வி அலுவலர்
சென்னை–08.

பெறுநர்

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.
(பள்ளியிலிருந்து பெறப்பட்ட கருத்துருக்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் தமிழ் Font " மருதம்"-ல் (TAU-Marutham) Excel Format-ல் மட்டுமே தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.)
2. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.

நகல்

1. கல்வி அலுவலர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
2. முதல்வர், ஆசிரியர் பயிற்சி மற்றும் கல்வியியல் நிறுவனம், சென்னை–5.
3. அனைத்து தொடக்க/நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், சென்னை மாவட்டம். (துங்கள் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு தெரிவித்து, கருத்துருக்கள் உரிய நேரத்தில் சார்ந்த அலுவலருக்கு அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.)